Registered as a Newspaper

**A/L 86**
**PAPER CLASS**
ஆரம்பம்
11 - 01 - 86
சனி பி. ப. 12-30 மணி
விபரங்களுக்கு;-
New Master Institute
BMC Lane, Jaffna

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

Physics - திரு. வர்ணம்
Chemistry - திரு. தில்லைநாதன்
Botany - திரு. குகாதரன்
Zoology - திரு. நாகநாதன்
Pure / Applied ]-Maths -திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, Jaffna.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞு மார்கழி மீ 29 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஜ. அவ் பிறை 2 (13-01-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:-48

# யுத்த நிறுத்தம்: ஈழம் தே.வி.மு. விலகி விட்டது

## ராஜீவுக்கு அறிவிக்கப்படும் அடுத்த நடவடிக்கை குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும்

சென்னை, ஜன.12

**இலங்கை அரசுப் படைகளுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து ஈழம் தேசிய விடுதலை முன்னணி விலகிக்கொண்டது.**

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக் கொண்டது ஏன் என்பது குறித்து, முன்னணி இன்னும் இரண்டொரு நாட்களில் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு அறிவிக்கும்.

அடுத்து என்ன நடவடிக்கையை மேற்கொள்வது என்பது குறித்து முடிவு செய்ய முன்னணியின் கூட்டம் விரைவில் நடைபெறும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து ஈழம் தேசிய விடுதலை முன்னணி விலகிக் கொண்ட தகவலை, முன்னணிப் பேச்சாளர் ஒருவர் சென்னையில் இன்று (ஞாயிறு) வெளியிட்டார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தோல்வி அடைந்துவிட்டது என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

8 மாதகாலம் அமுலில் இருந்த யுத்த நிறுத்த நிபந்தனைகளை இலங்கை ஆயுதப் படையினர் மீறினர் என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி குற்றஞ் சாட்டியது.

இந்திய அரசின் மத்தியஸ்தத்தோடு கடந்த ஆண்டு ஜூன் 18ஆம் திகதி யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தது

<u>புரோடெக் கோரிக்கை</u>

## சர்வதேச குழு நியமியுங்கள்

### தமிழரைக் காப்பாற்ற

சென்னை, ஜன.12

இலங்கைத் தமிழரை படுகொலையில் இருந்து காப்பாற்ற சர்வதேசக் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

இலங்கைத் தமிழரை இன அழிவில் இருந்து காப்பாற்றும் இயக்கம் (புரோடெக்) இவ்வேண்டுகோள் விடுத்துளளது.

இந்த இயக்கம் இதுசம்பந்தமாக அறிக்கை ஒன்றைச்சென்னையில் நேற்று வெளியிட்டது.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இருந்து இரண்டு தமிழ் உறுப்பினர்களும் ராஜினமாச் செய்துவிட்டனர்.

அரசு நியமித்த உறுப்பினர்களே இப்பொழுது அங்கம் வகிக்கின்றனர். அதிகமானோர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பாரபட்சமின்றி நடப்பார்க என்று நம்ப முடியாதுள்ளது.

இதனால் யுத்த நிறுத்தக் கணகாணிப்புக் குழு அர்த்தமற்றதாகிவிட்டது.

இதன் காரணமாக தமிழர் படுகொலையாவது தீவிரமாக்கப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இப்படி அந்த அறிக்கை கூறுகின்றது.

### முச்சந்திமுரளி



ஓ. பின்னை என்ன, குடியுரிமை தான் கிடைச்சிட்டுதே. இனி இப்படி நிபந்தனையளை விதிச்சு பேப்பரிலை பேரடிச்சாவலு கெதியா முன்னுக்கு வந்து ஆட்சியைப் பிடிக்கலாம் எண்டு அம்மா நினைக்கக்கூடும்!.

## மட்டுநகர் வெள்ளம் 4 பேர் மாண்டனர்

மட்டக்களப்பு, ஜன. 13

மட்டக்களப்பில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் மாண்டவர் எண்ணிக்கை நான்காக உயர்ந்தது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் வெள்ளம் பார்க்கச் சென்றவர்களின் தோணியை வெள்ளம் அடித்துச் சென்றதில் இருவர் உயிரிழந்தனர். நான்கு பேர் காப்பாற்றப்பட்டனர்.

இறந்தவர்கள் இருவரும் வெளிநாட்டில் வேலைபார்த்துத் திரும்பியவர்கள்.

மகிழவெட்டுவான் கரவெட்டிப்பாதையில் நிகழ்ந்த மற்றொரு சம்பவத்தில் 25 வயது குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளத்தில் மூழ்கி மரணமானார்.

சத்துருக்கொண்டான் சர்வோதயப் பண்ணை காவலாளியும் ஏற்கனவே வெள்ளத்திற்குப் பலியாகியிருந்தார்.

## கொழும்பு ரயில் சேவையில் நேரமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ் - கொழும்புக்கு இடையேயான இன்டர்சிட்டி, யாழ்தேவி நேரசூசிகை நேற்று முதல் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

### இன்ரர்சிற்றி

கொழும்பு, கோட்டையில் இருந்து காலை 5.45 மணிக்கு இன்ரர்சிற்றி புறப்பட்டு பகல் 12.35க்கு யாழ்நகர் வந்து சேருகின்றது.

பிற்பகல் 1 மணி 15 நிமிடத்துக்குப் புறப்பட்டு இரவு 8.30க்கு கோட்டையை அடைகின்றது.

### யாழ்தேவி

மருதானையில் இருந்து காலை 5.50க்கு புறப்படுகின்றது பிற்பகல் 1.05க்கு யாழ் வந்து சேரும் யாழ்தேவி, இரவு 9.50க்கு மருதானையை அடைகின்றது.

## தொண்டமானாறில் சூடு! வயோதிபர் காயம்

— கரவெட்டி செய்தியாளர் —

கரவெட்டி, ஜன. 13

தொண்டமானாறில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வயோதிபர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று அதிகாலை 7 மணியளவில் ஆயுதப் படையினர் முகாமை விட்டு வெளியேறிய போது அவர்கள் மீது கிரனைட் வீசப்பட்டதாக அறியப்படுகிறது.

இதைத் தொடர்ந்தே சரமாரியாக வேட்டுகள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# மலையகத் தமிழர் நான்கு லட்சம் பேருக்கு இலங்கை குடியுரிமை

கொழும்பு, ஜன. 13

மலையகத் தமிழர்கள் 4 இலட்சம் பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படவிருக்கிறது.

அமைச்சர் தொண்டமானுக்கும் அரசாங்க தரப்பில் அமைச்சர் லலித்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இது சம்பந்தமாக இணக்கம் காணப்பட்டதாக மிகவும் நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து உதயனுக்குத் தெரிய வந்துளளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் சேர்க்கப்படாதிருந்த மலையகத் தமிழர்களும் அவர்களது இயற்கை அதிகரிப்பும் சேர்ந்தே இந்த 4 இலட்சம் ஆகும்.

சனிக்கிழமை இரவு அமைச்சர் தொண்டமானுக்கும் அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது நான்கு இலட்சம் பேருக்கு இலங்கை குடியுரிமை அளிப்பது குறித்து கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் போராளிகள் துப்பாக்கிச்சூடு!

## பருத்தித்துறையில் ஐவருக்கு காயம்

— அலுவலகச் செய்தியாளர்: வனிதராஜன் —

யாழ்ப்பாணம், ஜன. 13

**பருத்தித்துறையில் நேற்றுக்காலை ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் பலமணி நேரம் துப்பாக்கிச் சூட்டுச் சண்டை இடம் பெற்றது.**

**அதன்விளைவாக பொது மக்கள் ஐவர் படுகாயமுற்றனர். அவர்களில் ஒருவர் பெண். தைப்பொங்கலுக்குப் பொருள்கள் வாங்க வந்தவர்களே காயமுற்றனர்.**

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

பருத்தித்துறைக் கடற்கரைப்பக்கமாக முகாமிட்டுள்ளஆயுதப்படையினர் நேற்றுக்காலை சுமார் 8 45 மணியளவில் இரண்டு வாகனங்களுடன் நடையில் வந்தனர். முகாமிலிருந்து 150 யார் தூரத்திலுள்ள கட்டடம் ஒன்றில் இருந்து அஸ்பெஸ்டஸ் ஷீட்டுகளைப் படையினர் கழற்றிக்கொண்டிருந்த சமயம், நகரின் பல பாகங்களிலும்குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

இதைத் தொடர்ந்து கடற்கரை முகாமில் இருந்த ஆயுதப் படையினர் நகரை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

போராளிகள் பல்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### சீரடைகிறது

மட்டக்களப்பு, ஜன.13

மட்டக்களப்பில் கடந்த இரண்டு நாட்களாக மழை இல்லை. வெள்ள நிலைமை சீரடைகிறது.

மட்டக்களப்பு—அம்பாறை பாதையில் மட்டும்போக்குவரத்து நடைபெறுகிறது. கொழும்பிலிருந்து அம்பாறை ஊடாக நிவாரணப் பொருட்களையும், உணவு வகைகளையும் அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

### உதயன் வருட வழிகாட்டி

நாளை (14-1-1986) செவ்வாய்க்கிழமை "உதயன்"

இதழுடன் 1986ஆம் ஆண்டுக்குரிய வருட வழிகாட்டி இணைக்கப்படும்.

### சுபநேரம்

13 - 01 - 1986

திங்கட்கிழமை

சுபநேரம்

12.33 முதல் 2-03 வரை

ராகு காலம்

8 03 முதல் 9-33 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# ராஜீவுடன் பேசுவதற்கு சிறிமா நிபந்தனை விதிப்பு

## இலங்கை அரசுக்கு

கொழும்பு, ஜன. 13

தீவிரவாதிகள் பற்றி இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கை அரசுக்கு நிபந்தனை விதித்து இருக்கின்றார்.

இலங்கை அரசு உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே திருமதி பண்டாரநாயக்கா விதித்த நிபந்தனை ஆகும்.

தேசிய ஒற்றுமைக்கான இலங்கையர் இயக்கத் தூதுக்குழு ஒன்று டாக்டர் ரஞ்சித் ஹெட்டியாராய்ச்சி தலைமையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்தது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதியான நிரந்தரத் தீர்வுகாண உதவவேண்டும் என்று தூதுக்குழு திருமதி பண்டாரநாயக்காவைக் கேட்டுக் கொண்டது.

அச்சமயம் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு திருமதி பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

ஆயுதங்களைக் கீழே போடும்படி தீவிரவாதிகளை நிர்ப்பந்திக்கும்படி திரு. ராஜீவ் காந்தியை

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா ஆஸ்பத்திரியில்

கொழும்பு, ஜன. 13

அமைச்சர் திரு. தொண்டமான் சுகயீனம் காரணமாக கொழும்பில் தனியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளி இரவு திரு. தொண்டமான் நாடு திரும்பினார்:

சனிக்கிழமை அமைச்சர் லலித் அத்துலத் முதலியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

பின்னர் தனியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

## ராஜினமா ஏற்கப்பட்டது

கொழும்பு, ஜன. 13

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் இரண்டு பேரின் ராஜினமாக்களை ஜனாதிபதி ஜயவர்த்தன ஏற்றுக்கொண்டு விட்டார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, திரு. க. சிவபாலன் ஆகியோரே ராஜினமாச் செய்த உறுப்பினர்கள்.

ஈழம் தேசிய விடுதலை முன்னணி சமர்ப்பித்த 22 பேர் கொண்ட பட்டியலில் இருந்தே, இவர்கள் இருவரையும் ஜனாதிபதி கண்காணிப்புக் குழு உறுப்பினர்களாக நியமித்தார்.

## முன்னாள் உறுப்பினர் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம்.ஜன.13

வவுனியா மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினராக இருந்த திரு. பரமநாதன், இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கணேஷின் இறுதிக்கிரியை இன்று

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணம் உதவி சுங்க கலெக்டர் திரு. செ. கணேஷின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறுகின்றன.

அன்னாரது பூதவுடல் இன்றுகாலை 10 மணிக்கு கச்சேரி-நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரிகைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இம்மாதம் 5.ம் திகதி அவரும் சக ஊழியர்களும் ஊர்காவற்றுறைக்குச் சென்றுவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். அவசர சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

<u>1986 நடுப்பகுதியில்</u>

## பயங்கரவாதத்திற்கு முடிவு கட்டுவாராம்

சொல்பவர் அமைச்சர் அல்விஸ்

கொழும்பு, ஜன. 13

இந்த ஆண்டு நடுப்பகுதியில் பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டப்படும் என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் உல்லாசப் பிரயாண ஹோட்டல் ஒன்றை அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

அச்சமயம் பேசுகையி

(4-ஆம் பக்கம் பார்க்க)

மலிவு விற்பனை!
விரையுங்கள்!!

**Bata**

Show Room
19, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
மலிவு விலையில் பாட்டாவின்
நான்கு மோஸ்தர்கள்
விற்பனையில் உள்ளன

| | | விற்பனை விலை ரூபா சதம் | மலிவு விலை ரூபா சதம் |
|---|---|---|---|
| FALTON | 10 | 249.90 | 200 00 |
| NORTH STAR | 49 | 229.90 | 180 00 |
| MICROLON | 21 | 99.90 | 70.00 |
| MICROLON | 11 | 99.90 | 70.00 |

முந்துங்கள்! விரையுங்கள்!!
சில தினங்கள் மட்டுமே!!!
BATA — தரத்தின் சின்னம்,

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகர் சக்ரவர்த்திக்கு அதிர்ஷ்டம் இல்லையாம்

''ரிஷிமூலம்'' படத்தில் சிவாஜியுடன் சேர்ந்து நடித்ததன் மூலம் புகழ் பெற்றவர் சக்ரவர்த்தி. ஆனால் அவரின் துரதிர்ஷ்டம் இன்னும் திரையுலகில் நிலையான ஓர் இடத்தைப் பிடிக்கமுடியவில்லை.

நடிகர் சக்ரவர்த்தி தமது துரதிர்ஷ்டம் குறித்து கவலையோடு கூறுகிறார்:

''சினிமாவைப் பொறுத்தமட்டில் திறமையுடன் அதிர்ஷ்டமும் இருக்கவேண்டும். அந்த அதிர்ஷ்டம் இன்னும் எனக்கு வந்து சேரவில்லை.

''உதயகீதம்'' படத்திற்குப் பின்னர் அதிர்ஷ்டத்துக்கான அறிகுறி தென்படுகிறது.

எம் ஜி ஆர், சிவாஜி, ரஜனி போன்ற ஒரு சிலர் மட்டுமே தங்களுக்கு என்று ஒரு பாணியை அமைத்துக் கொண்டு புகழ் பெற்றனர்.

மற்றவர்கள் அப்படி அல்ல. அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கேரக்டராகவே மாறி நடித்து நல்ல நடிகன் என்று மட்டுமே பெயர் எடுத்தனர்.

அதுபோல எனக்கு எந்தப் பாத்திரம் அளிக்கப்படுகிறதோ அந்தப் பாத்திரமாகவே மாறி நடிக்கிறேன்.

அதன் மூலம் நான் திரையுலகில் பரிணமித்து, பிரகாசிக்க ஆவலாய் இருக்கிறேன்.

சிவாஜியுடன் 'ரிஷிமூலம்' படத்தில் நடித்தேன். அப்போது எனது நடிப்பைப் பார்த்து பிரமித்துப் போனார் சிவாஜி சார்.

''எதிர்காலத்தில் நீ ஒரு பெரிய நடிகனாக வருவாய்'' என்று ஆசியும் கூறினார் அவர்.

இதை ரசிகர்கள், நண்பர்கள் கூட அடிக்கடி கூறுவது உண்டு. நானும் அதற்கு ஏற்றாற்போல் சிறப்பாகவே நடிக்கிறேன்.

அப்படி நடித்திருந்தும் என் துரதிர்ஷ்டமோ என்னவோ சில படங்கள் சரியாக ஓடவில்லை. பின் எப்படி நான் ஒரு பெரிய நடிகனாக உயர முடியும்?'' என்றார் மிகவும் ஏக்கத்தோடு சக்ரவர்த்தி.

தினசரி சினிமா

நான் பயங்கரவாதியா?- நேரில் அறிய

# றேகனே லிபியா வாரும்!

## கடாபி அழைக்கிறார்

திரிப்போலி, ஜன. 12

''நான் பயங்கரவாதியா? அதை அறிந்து கொள்ள றேகனே லிபியாவுக்கு நேரில் வாரும்'' இப்படி அழைப்பு விடுத்தார் லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி.

தன்னைச் சந்தித்து ஆறு அமெரிக்க பத்திரிகையாளர்கள் மூலமாக லிபியத் தலைவர் இந்த அழைப்பை அமெரிக்க அதிபருக்கு விடுத்தார்.

'என்னுடன் திரு. றேகன் சில நிமிடங்கள் பேசினால் போதும் நான் பயங்கரவாதி அல்ல என்பதை திரு றேகன் உணர்ந்து கொள்வார்'' இப்படி லிபியத் தலைவர் கடாபி அமெரிக்கப் பத்திரிகையாளர்களிடம் சொன்னார்.

லிபிய - அமெரிக்க நெருக்கடி உச்சக்கட்டம் அடைந்த நிலையில் கடாபி இந்த அழைப்பை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ரோம் வியன்னா சர்வதேச விமான நிலையங்களில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல்களின் பின்னணியில் லிபியா இருந்துள்ளது என்றும் -

கடாபி உலகின் முதலாவது பயங்கரவாதி என்று அமெரிக்க அதிபர் வர்ணித்ததுமே நெருக்கடிக்கு வித்திட்டது.

இதைத் தொடர்ந்து அமெரிக்க முதலீடுகளை லிபியாவில்மேற்கொள்ள வேண்டாம் என்று அமெரிக்க அதிபர் உத்தரவிட்டார். அத்துடன் லிபியாவில் உள்ள அமெரிக்கர்களை, அமெரிக்காவுக்குத் திரும்பி வரும்படியும் அதிபர் றேகன் உத்தரவிட்டார்.

''இதற்குப் பதில் நடவடிக்கையாக லிபியாவில் உள்ள அமெரிக்கரின் சொத்து, ஆதனங்களைப் பறிமுதல் செய்வது பற்றி நான் இன்னும் முடிவு செய்யவில்லை'' இப்படி லிபியத் தலைவர் கடாபி தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் குழு

## தென்துருவத்தை எட்டியது

லண்டன், ஜன. 12

பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் குழு ஒன்று திட்டமிட்ட காலத்துக்கு முன்னரே தென்துருவம் சென்று அடைந்தது.

இத்தகவலை பி. பி. சி. வெளியிட்டது.

5 உறுப்பினர்களைக் கொண்ட ஆராய்ச்சியாளர் குழு, 900 மைல் தூரம் நடந்து சென்று தென்துருவத்தை அடைந்தது.

கடந்த நவம்பர் மாதத்தில் குழு தனது ஆராய்ச்சிப் பயணத்தை ஆரம்பித்தது.

1911இல் கப்டன் றொபர்ட் ஸ்கொட் தலைமையில் ஆராய்ச்சிக் குழு தென்துருவத்தை அடைந்தது.

கப்டன் ஸ்கொட் சென்ற பாதை வழியே இந்தக் குழுவும் தென்துருவத்தை அடைந்தது.

1911இல் தென்துருவம் சென்ற கப்டன் ஸ்கொட் குழு, தாயகம் திரும்பாமலே ஐஸ்கட்டியினுள் புதைந்து மாண்டது.

இப்போது சென்ற பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் குழு சுகமே உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## ஆவிகளை அகற்ற அதிருத்ர யக்ஞம்

போபால், ஜன. 12

வாயுக் கசிவினால் போபால் மாநிலத்தில் 1984 டிசம்பரில 2,500 பேர் வரையில் மரணமானார்கள் அல்லவா!

அவர்களின் 'ஆவிகள்' போபாலில் இருந்து அகன்று செல்லவேண்டும் என்று வேண்டி பத்து நாள் 'அதிருத்ர யக்ஞம்' ஒன்று நடத்தப்பட்டது.

ஜனவரி 1 ஆம் திகதி ஆரம்பமான 'யக்ஞம்' 10 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. போபாலில் உள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் பத்துத் தினங்களும் காலையிலும் மாலையிலும் சங்குகள் ஊதப்பட்டன.

## கருவில் உருவாகிறது கல்வித்திரு

### ஆய்வின் மூலம் அவதானிப்பு

கலிபோர்னியா, ஜன. 12

கருப்பையிலிருக்கும் குழந்தைக்கும் கல்வி போதனை செய்யலாம்.

கலிபோர்னியாவில் நடந்த சம்பவம் ஒன்று இதை நிரூபித்திருக்கிறது.

திருமதி எய்லின் டானியல்ஸன், அமெரிக்கக் குடும்ப மாது.

அவர் பிள்ளைப்பேற்றை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்.

பேறு மாதம். கணவர் காலையிலும் மாலையிலும் மனைவியின் வயிற்றில் கன்னத்தைப் பதித்து ''குழந்தை, அப்பா பேசுகின்றேன்''— என்று சொல்லி வந்தார்.

அப்படிச் சொல்லும் சமயம் எல்லாம் குழந்தை உதைப்பதை, தாய் உணர்ந்தாள்.

கணவன் தினமும் இப்படிச் செய்து வந்தார்.

பிரசவ விடுதியில் திருமதி டானியல்ஸன் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். ஆண் குழந்தை.

திரு. டானியல்ஸன் நேருக்கு நேர் மகனைப் பார்த்தார்.

''குழந்தாய் — நான் தான் அப்பா''— என்று தந்தை சொன்னதுதான் தாமதம் மறுகணம் குழந்தை அழுகையை நிறுத்தி விட்டது.

அது மட்டும் அல்ல தலையைத் திருப்பி தந்தையைப் பார்க்கவும் குழந்தை முயற்சித்தது.

ஆச்சரியமாக இருந்தது.

கருப்பையினிலே படிப்பும் ஆரம்பமாகின்றது என்பதை இது நிரூபித்துள்ளது.

சான்பிரான்ஸிஸ்கோவில் உள்ள மருத்துவக் கல்லூரியில் இது சம்பந்தமாக ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது. ஆராய்ச்சிக்காக 700 கர்ப்பிணித் தாய்மார்கள் அக்கல்லூரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தை பிறப்பதற்கு முன்னரே, கருப்பையினுள் வைத்து குழந்தைக்கு அறிவூட்டலாம் என்பதை நிரூபிப்பது தான் ஆராய்ச்சியின் நோக்கம்.

இதைத்தான் தாயின் வயிற்றினுள் இருந்து நாராயணா! நாராயணா!! என்று கூறி பிரகலாதன் எப்பொழுதோ நிரூபித்து விட்டானே!

## கினி நாணயம் பெயர் மாற்றம்

கொனாக்ரி, ஜன. 12

கினி நாடு தனது கரன்ஸியின் பெயரை மீண்டும் மாற்றி உள்ளது.

1972 வரை கினி பிராங்க் என்றே கரன்ஸி அழைக்கப்பட்டு வந்தது.

197[illegible] இல் பதவிக்கு வந்த ஜனாதிபதி, பிராங்க் என்ற பெயரை மாற்றி 'சைலி' என்று கரன்ஸிக்கு பெயர் சூட்டினார்.

கரன்ஸி பெயர் மாற்றம் ஜனவரி 6 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளது.

நாணயப் பெயர் மாற்றம் காரணமாக நாட்டின் கடல், தரை எல்லாம் இரு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளன.

# வெளி உலகில்

சத்ய சாயி பாபாவின்

## பிரசாந்தி நிலையம் முன்பாக மறியல்

### 16 பகுத்தறிவாளர்கள் கைது

அனந்தப்பூர், ஜன. 12

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் புட்டபர்த்தி பிரசாந்தி நிலையம் முன்பாக மறியல் நடத்த முயற்சித்த 16 பகுத்தறிவாளர்களைப் பொலிஸார் கைது செய்தனர்

அகில இந்திய நாஸ்திகர் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர். பிரேமானந்த் தலைமையிலான 10 பேர்கள் கர்நாடக - ஆந்திரா எல்லையில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

ஆந்திர பிரதேச பகுத்தறிவாளர் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் பானு பிரசாத் தலைமையிலான 6 பேர் கொண்ட குழு பொலீஸாருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு பிரசாந்தி நிலையத்தினுள் நுழைந்துவிட்டனர்.

அங்கு சுலோக அட்டைகளைப் பிடித்தபடி சாயிபாபாவுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிக்கொண்டு ஊர்வலமாகச் செல்கையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து புட்டபர்த்தியில் ஒருவார காலத்திற்கு கூட்டம், ஊர்வலம் நடத்துவதற்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# சந்தேக நபர்களாகக் கருதப்படாதவர்கள் 24 மணி நேரத்தில் விடுதலை

## கிளிநொச்சி இணைப்பதிகாரி உறுதி

கிளிநொச்சி, ஜன. 13

கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டவர்களில் சந்தேக நபர்களாக் கருதப்படாத அனைவரும் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்தில் விடுவிக்கப்படுவார்கள்.

ஏனையவர்களைப் பற்றிய தகவல்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கும் கிளிநொச்சி பிரஜைகள் குழுவுக்கும் உடனடியாக அறிவிக்கப்படும்.

தம்மைச் சந்தித்த கிளிநொச்சி பிரஜைகள் குழு உறுப்பினர்களிடம் கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி கேர்ணல் கொப்பேகடுவ இப்படி உறுதி மொழி அளித்திருக்கிறார்.

கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமுகமாக கிளிநொச்சிப் பிரஜைகள் குழு கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது.

குழுவின் தலைவர் டாக்டர் கே சுப்பையா, உபதலைவர்களான டாக்டர் கே. திருலோகமூர்த்தி, எஸ். ஆர் அலோசியஸ் ஆகியோரே இணைப்பதிகாரியைச் சந்தித்து உரையாடினர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வைத்து கைது செய்யப்பட்டு பின்னர் வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு கொண்டு வரவும் -

அங்கு வைத்து அவர்களுக்கு எதிரான விசாரணைகளைத் துரிதப்படுத்தி உடன் நடவடிக்கை எடுக்கவும் -

அத்தகைய சந்தேக நபர்களை அவர்களது உறவினர்கள் சந்தித்துப்பேச ஏற்பாடுகள் செய்யவும் -

இந்தச் சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டது.

## ஆதன வரி உயர்வு இடை நிறுத்துமாறு

### மட்டக்களப்பில கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன. 13

மட்டக்களப்பு பகுதியில் தற்போதைய சூழ்நிலையில் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாது. இந்நிலையில் மாநகர சபை 4 ஆம் கந்தாயம் தொடக்கம் அதிகரித்துள்ள ஆதன வரியை நிலைமை சீராகும் வரை இடைநிறுத்தம் செய்ய வேண்டும்.

இக் கோரிக்கையை மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் வரியிறுப்பாளர்களும், பொது ஸ்தாபனங்களும் மாநகர சபை ஆணையாளரிடம் வலியுறுத்தி உள்ளனர்.

கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மாநகரசபை ஆதன வரி 2 தொடக்கம் 4 மடங்கு வரை அதிகரித்துள்ளது. இவ்வரி அதிகரிப்பு வரியிறுப்பாளர்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்துவதாக அமைந்துவிட்டது.

சபையின் நடவடிக்கைகளை விஸ்தரிக்க வரி அதிகரிப்பு தேவைதான் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் ஆனால் தற்போதைய சூழ்நிலை அதற்கு பொருத்தமானதல்ல என்பதைச்சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

வரியிறுப்பாளர்களின் பல்வேறு வரிகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள், தொலைக்காட்சிப் பெட்டி உட்பட பலபொருள்கள் பலதடவைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இந்நிலையில் சபை தனது தற்போதைய வருமானத்தைக் கொண்டு பொதுமக்களின் மிக அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ளட்டும்.

ஏனைய சேவைகளை நிலைமை சீராகும் வரை பின்போடட்டும். அது வரை வரி அதிகரிப்பை [illegible] செய்யவேண்டும்.

இவ்வாறு [illegible] விடுக்கப்பட்டுள்ளது.

## விவசாய பிரிவுக்கு இரு கட்டடங்கள்

### வியாபாரிமூலை, அளவெட்டி பகுதிகளில்

யாழ்ப்பாணம், ஜன. 13

வியாபாரிமூலை, அளவெட்டி ஆகிய இடங்களில் இரு விவசாய பிரிவுக் கட்டடங்கள் அமைக்கப்பட உள்ளன.

உரக்களஞ்சியங்களும், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர், விவசாய விஸ்தரிப்பு அலுவலர், ஆகியோரின் அலுவலகங்களும் கால்நடை வளர்ப்புப் பிரிவும் இக் கட்டடங்களில் இயங்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

யாழ்ப்பாண கமநல சேவைத் திணைக்களத்தின் சிபார்சின் பேரில் இக்கட்டடங்களுக்கான நிதி எண்பத்தையாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது

அகதி மாணவர் பிரச்சினை

## மனிதாபிமானம் அவசியமானது

### அதிபர்களுக்கு அறிவுரை

யாழ்ப்பாணம், ஜன 13

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்ட அகதிகள் யாழ் பாடசாலைகளில் அனுமதி நாடுகிறார்கள்.

அகதி மாணவர்கள் பிரச்சினையை அதிபர்கள் முறை பாடபோதனையில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதற்குத் திட்டமிட்ட அடிப்படையில் செயற்பாடுகளை அதிபர், ஆசிரியர்கள் ஒழுங்கு செய்தல் சட்டத்துக்கு அமைவாகவும் மனிதாபிமான உணர்வுடனும் கையாள வேண்டும்.

மானிப்பாய் கல்வி வட்டார அதிபர்கள் கூட்டத்தில் உரையாற்றிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்சயன் இவ்வாறு கூறினார். அவர் தனது பேச்சில் தொடர்ந்து கூறியதாவது:-

பாடசாலையை விட்டு விலகிய பின்னரும் மாணவர் நலனில் ஆசிரியர்கள் கரிசனை எடுக்க வேண்டும். இதனால் ஆசிரிய சமூகம் பெற்றோருடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

பாடசாலைகளில் செய்[illegible] வேண்டும்.

இப்படி அவர் சொன்னார்.

விஞ்ஞான கல்வி அதிகாரி திரு எஸ். நடராசாவும் உரையாற்றினார்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## புதிய வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 13

கரவெட்டி மாணிக்கவாசகர் மகாவித்தியாலயத்தில் ஆண்டு ஏழுக்கான வகுப்புகள் முதன் முறையாக ஆரம்பமாகி உள்ளன.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு வி. கே. ஈசுரபாதம் இப் புதிய வகுப்பு ஆரம்ப வைபவத்தை குத்து விளக்கேற்றித் தொடக்கி வைத்தார். அதிபர் திரு. வி[illegible] தலைமை வகித்தார். திருமதி எஸ். [illegible] கூறினார்.

பாடசாலையும் சமூகமும்

## இணைந்த செயற்பாடு

### சங்குவேலியில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 13

மாணவர் கல்வி, ஆளுமை விருத்தி சம்பந்தப்பட்ட முயற்சிகள் பொதுப்பணி இப் பணிக்கு பாடசாலை, சமூகம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயற்பாடு நலன் தரும்.

சங்குவேலி அரசினர் பாடசாலையில் சமூக சேவையாளர் திரு. த. செல்லத்தம்பியின் நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது தலைமை வகித்த அதிபர் திரு. ச. சண்முகலிங்கம் இவ்வாறு கூறினார்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. இராசா சதானந்தன் தனது பேச்சில் பின்வருமாறு கூறினார்.:-

காலஞ்சென்ற சமூக சேவையாளர் திரு. செல்லத்தம்பியின் நன் முயற்சியினால் சங்குவேலி நெசவு நிலையம், சங்குவேலி வாசிகசாலை ஆகியன அமைக்கப்பட்டன. சங்குவேலி அரசினர் பாடசாலையின் தேவை கருதி மாணவர்களுக்கு வேண்டிய தளபாட வசதிகளைச் செய்ய உதவியவர் அவர் - என்றார்.

திரு. கா. வை. மா. மாணிக்கவாசகர், அன்னாரின் நினைவாக ஒரு தென்னங்கன்றை பாடசாலை வளவில் நட்டார். ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. எஸ். தில்லைநாதனும் உரை ஆற்றினார்.

## $1\frac{1}{2}$ லட்சம் செலவில் கைத்தொழில் மண்டபம்

### தங்கோடை கிராமத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 13

காரைநகரில் தங்கோடை கிராமத்தில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் கைத்தொழில் மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

85 ஆம் ஆண்டு கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு உள்ள இம்மண்டபத்தில் இரு சிறிய கைத்தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நல்லெண்ணெய், அப்பளம் தயாரிக்கும் இவ்விரு கைத்தொழில்களில இக் கிராமத்தைச் சார்ந்த சுமார் முப்பது படித்த இளைஞர்கள், யுவதிகள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள் என்று திட்டத்துக்குப் பொறுப்பாக உள்ள யாழ் செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. கி கோபாலரட்ணம் உதயனுக்குத் தகவல் கொடுத்தார்.

## ஒரு பாடசாலைக்கு மட்டும் அனுமதி

மானிப்பாய். ஜன 13

1986ம் ஆண்டில் ஏழாம் ஆண்டு வகுப்பை புதிதாக ஆரம்பித்து நடத்துவதற்கு, மானிப்பாய் கல்வி வட்டாரத்தில் கந்தரோடை கந்தையா தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதன் அதிபர் திரு. அ தற்பரானந்தன் இதனைத் தெரிவித்துள்ளார்.

## மக்கள் முகம்

### சமாதான சபை

வட்டுக்கோட்டை, ஜன. 13

தொல்புரம் கிராம சேவையாளர் பிரிவுக்கான சமாதான சபை அங்குரார்ப்பணக் கூட்டம் தொல்புரம் மத்திய ச. ச. நிலையத்திற்கு அருகாமையில் சுழிபுரம் கிராம சபை பிரதேச பிரஜைகள் குழுத் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் சமாதான சபை நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

காப்பாளர்கள் சங்கானை உதவிஅரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம், தொல்புரம் கிராம சேவையாளர் திரு. மு. தர்மதாசன்.

தலைவர்: திரு. கா. சந்திராசா (யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி)

உபதலைவர்: திரு. சி. சிவப்பிரகாசம் (ஓய்வு பெற்ற விஞ்ஞானகூட ஆய்வாளர்)

செயலாளர்; திரு. க. தர்மரத்தினம் அதிபர்.

உப செயலாளர்: திரு. என். எஸ். கிருஷ்ணன்.

பொருளாளர்: திரு. சி. தாமோதரநாதன் (உதவித் தபால் அதிபர்)

உறுப்பினர்கள்: திரு. வை. சுந்தரலிங்கம், திரு. ப. சரசானந்தராசா திரு. சு. சிவவாகீசர், திரு. மு. பார்த்தசாரதி, திரு. எம். எஸ். சிவப்பிரகாசம், திரு. சி. பூலோகராசா, திரு. வே. தாமோதரம் பிள்ளை, திரு. நா. தியாகராசா, திரு. எஸ். பரமசிவம், திரு. க. மோகனதாஸ், திரு. அ. சிதம்பரப்பிள்ளை, திரு. மு. சுப்பிரமணியம்.

கிராம ரீதியாக மேலும் நால்வர் தெரிவு செய்யப்படுவர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மற்றவர் விடும் பிழையைக் கண்டு நீ சிரிக்காதே.
நீ விடும் பிழைகளோ மற்றவர்களுக்கு கூடுதல் சிரிப்பைத் தரும்.

- பிராங்ளின்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 13-01-86 தொலைபேசி: 24805 22073 த. பெ. 28

## ஜனநாயகத்தைச் சாகடிக்கும் முயற்சியின் முன்னோடி

இலங்கை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் பெரும் சர்ச்சை ஒன்றைக் கிளப்பியிருக்கிறது.

அரசாங்க அமைச்சர் ஒருவர் கூறியதாக வெளிவந்த செய்தி ஒன்று குறித்தே பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது.

தீவிர இடதுசாரி அமைப்புகளுடன் தொடர்பு உள்ளவர்களுக்கு அரசு உத்தியோகம் வழங்காது என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் கூறியதாக வெளிவந்த செய்தி சரியா? அவ்வாறுயின் அரசும் அதற்கு ஆதரவும் உடந்தையுமாக இருக்கிறதா? இவையே ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் விடுத்திருக்கும் கேள்விகள்.

அவை மிகவும் நியாயமான வினுக்கள் என்பதில் எமக்கும் சம்மதமே. சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சர் அவ்வாறு கூறியிருந்தால் அது நிச்சயம் கண்டிக்கப்பட வேண்டியது என்பதிலும் கருத்து வேறுபாடில்லை.

இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் சிந்தனை, கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரங்கள் வழங்கப்பட்டிருப்பதாக அரசமைப்புச் சட்டம் செப்புகிறது. ஒருவன் தனது மனதுக்குப் பிடித்த அரசியல் கட்சி ஒன்றின் ஆதரவாளனாக, அபிமானியாக, தொண்டனாக இயங்கும் உரிமை அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று.

சட்டரீதியாக இயங்கும் எந்த ஓர் அரசியல் கட்சியையும், அரசியல் இயக்கத்தையும் ஆதரிக்கும் உரிமைக்கு மறுபெயர் தான் ஜனநாயகம்.

அவ்வாறிருக்க, இடதுசாரிக் கட்சிகள் என்பதற்காக அவற்றின் ஆதரவாளர்கள், அபிமானிகளுக்கு அரச வேலைவாய்ப்பு மறுக்கப்படுவது ஜனநாயகத்துக்கு விரோதம். அரசமைப்புக்கும் முரணானது.

சர்வாதிகார நாடுகளில், தனிக் கட்சி ஆட்சி நடக்கும் நாடுகளில் கூட இத்தகைய புறக்கணிப்பும், தடையும் இருப்பது மிக மிக அபூர்வம்.

அரசுக்கு விசுவாசமின்றிச் செயற்படுதல். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல். அதனைக் கவிழ்க்க சதி செய்தல் அல்லது நாசவேலை செய்தல்.

இவ்வாறான குற்றங்களை ஒருவர் அரசாங்க சேவையில் இருந்து கொண்டே செய்தால் அவரைப் பதவி விலக்கலாம். அதற்குச் சட்ட வசதியும் உண்டு.

ஒருவரை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளும்போது அவர் குறிப்பிட்ட ஒரு கட்சியின் ஆதரவாளர் அல்லது அபிமானி என்பதற்காக அவரை ஒதுக்குவதா? அரசாங்கக் கட்சி ஆதரவாளர்களுக்கு மட்டுந்தான் வேலைவாய்ப்பா? அவ்வாறுயின் அது அநியாயம்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கு, பிரதமருக்கு உரிய சகல சலுகைகளும், வசதிகளும் வழங்கப்படுகின்றன. அவ்வாறுயின், அரசாங்கக் கட்சி ஆதரவாளரையும், எதிர்க்கட்சி ஆதரவாளரையும் எவ்வாறு வித்தியாசமான கோணத்தில் பார்க்க முடியும்?

அமைச்சர் கூறியது போல இடதுசாரிக் கட்சி ஆதரவாளர்கள் அரசாங்க வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்பட்டால் அது தனிக் கட்சி ஆட்சிக்கு வழி கோலும். ஜனநாயகத்தைச் சாகடித்து விடும்.

வேலைவாய்ப்பில் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டபோது, பெரும்பான்மை இன மக்களால் அதன் தாக்கத்தை உணர முடியவில்லை. இப்போது தமக்கு வரும்போது தான் அது எவ்வளவு பாரதூரமானது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது தலைவலி தனக்குத் தனக்கு வந்தால் தான் வேதனை தெரியுமென்பது சரியாகிவிட்டது.

வேலை வாய்ப்பைப் போலவே ஒரு நாள் அரசியல் உரிமைகளை நசுக்கும் அரசாங்கப் பொறியில் பெரும்பான்மை மக்கள் சிக்குப்படுவர். அப்போதுதான் தமிழர்களாகிய நாம் இப்போது படும் அவலத்தை அவர்களால் உணர முடியும்.

எமது சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுகிறது. எமது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எமது மக்கள் காரணமில்லாமல் சுட்டுத் தள்ளப்படுகிறார்கள். இனப்படுகொலை ஒன்றே நடந்துகொண்டிருக்கிறது.

இதே அனுபவம் பெரும்பான்மை மக்களில் ஒரு சாராருக்கு ஒரு காலத்தில் கிடைக்கலாம். அதற்கு இந்த வேலை வாய்ப்பு விவகாரம் ஒரு ''சாம்பிள்''; முன்னோடி.

# தனியான பொலிஸ் சேவை

# தமிழ் மாநில அரசுக்கு

## இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா அமெரிக்கா ஆகியவற்றில் இருப்பதுபோல்

இணைப்பு 2-தொடர்ச்சி

1983 ஜுலைக்குப் பின்னர் இன்றுவரை தமிழர் இனப்படுகொலை செய்யப்படுவதைத் திரும்பவும் சொல்ல வேண்டியது இல்லை.

குறைந்த பட்சம் சொல்லப்போனால் 5 ஆயிரத்துக்கு அதிகமான அப்பாவித் தமிழர்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டு விட்டன. ஆயிரக்கணக்கானோர் வீடு இழந்து நிர்க்கதியாக உள்ளனர்.

இலங்கைப் பொலீஸ், ஆயுதப்படையினரின் சாதனை இது.

சூழ்நிலை, நிலைப்பாடு முதலியவற்றைக் கவனித்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுவதும் இயற்கையாகவே வித்தியாசப்படும்.

தமிழ்ப்பகுதிகளில் உள்ளூர் பாதுகாப்பு - சட்டம் ஒழுங்கு பராமரிப்புத்துறை பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் பொழுது, பலகாரணிகளை கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான தீவிர பகைமை —

1983 சம்பவங்கள் ஏற்படுத்திய கசப்பான உணர்வு —

தமிழருக்கு எதிராக எதையும் செய்யலாம் என்ற மனப்போக்கு ஆயுதப்படையினரிடையே வளர்ந்து வருவது —

இந்த மனப்போக்கு அபாயக் கட்டத்தையும் தாண்டி வளருவதற்கு அரசியல் தலைமை அளிக்கும் ஆதரவு—

இவற்றை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்தே உள்நாட்டுச் சட்டம், ஒழுங்கு பராமரிப்புக்கு தீர்வு காணப்படவேண்டும்.

> தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்துள்ள மாற்று யோசனைகள் அடங்கிய திட்டத்தின் ஆறுவது பகுதி இன்று பிரசுரமாகிறது.

இந்தப் பின்னணியில், தமிழ்ப் பகுதிகளுக்குத் தனியான மாநில பொலீஸ் சேவை ஒன்று தேவை என்பது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

அரசாங்கம் சமஷ்டி, சமஷ்டிக்குக் கிட்டத்தட்ட அல்லது ஒற்றையாட்சி அரசமைப்பைக் கொண்டதாக இருந்தாலும் உள்ளூர் அமைப்பு ஒன்றினால் நிர்வகிக்கப்படும் தனியான 'பொலீஸ் படையைக் கொண்டிருக்க வேண்டும்.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா முதலிய நாடுகளில் அரசமைப்பு வித்தியாசப்பட்டும், பொலீஸ் சேவைகள் தனியாக நிர்வகிக்கப்பட்டும் வருகின்றன.

அப்படியான தனிப் பொலீஸ் சேவை இலங்கையிலும் அமைக்கப்பட வேண்டும் என்பதற்குப் போதுமான காரணங்கள் உள்ளன.

தமிழ்ப்பகுதிகளில் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் நோக்குடனும், சட்டம் - ஒழுங்கைப்பராமரிக்கும் நோக்குடனும் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. மாநில அரசுக்கு மாற்றம் செய்யப்படும் அதிகாரங்களுடன் கீழ் வருவனவும் இடம் பெற வேண்டும்;

அ. பொதுசன ஒழுங்கு (கடற்படை, ஆயுதப்படை, விமானப் படையை உபயோகிக்காமல்)

ஆ. பொலீஸ்

இ. உயர்நீதிமன்றம், அப்பீல் நீதிமன்றம் ஆகியவற்றைத் தவிர்த்து மற்ற எல்லா நீதிமன்றங்களின் அதிகாரங்கள் எல்லாம் மாநில அரசுக்கு கீழ் வர வேண்டும்.

2. ஒவ்வொரு மாநில அரசிலும் தனிப்பொலீஸ் படை நிறுவப்பட வேண்டும். மாநிலத்தில் இருந்து அப்படைக்கு ஆள் திரட்டப்பட வேண்டும். அந்தப் படை 'மாநில பொலீஸ் படை' என்று அழைக்கப்பட வேண்டும். மத்திய பொலீஸ் படை ஒன்றும் அமைக்கப்பட வேண்டும்.

3. மாநிலத்தின் பொலீஸ் அத்தியட்சகர், மாநில அரசினால் நியமிக்கப்படுவர்.

மாநில அரசு, சட்டத்தின் பிரகாரம் அதிகாரம் வழங்கினால் ஒழிய எந்த ஓர் அதிகாரியும், நீதிமன்றமும் பொலீஸ் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தவும் மேலாதிக்கம் செலுத்தவும் முடியாது.

4. மாநிலத்தின் பாதுகாப்பு, பொதுசன ஒழுங்கு பராமரிப்பு, அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு ஆகியனவற்றுக்குக் குந்தகம் விளைவிப்பது சம்பந்தமாக ஈடுபடுபவர்களைத் தடுப்புக் காவலில் வைப்பது சம்பந்தமாக மாநில அரசு சட்டம் இயற்றலாம்.

### 5. மாநில பொலீஸ் சேவை அமைப்பு

மாநில பொலீஸ் அமைப்பு பின்வருபவர்களைக் கொண்டு இருக்கும்;

அ. ஒரு பிரதிபொலீஸ்மா அதிபர்

ஆ. இரண்டு பொலீஸ் அத்தியட்சகர்கள்

இ. எத்தனை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் மற்றும் அதிகாரிகளை நியமனம் செய்வது குறித்து மாநில அரசு காலத்துக்குக் காலம் தீர்மானித்துக் கொள்ளும்.

மாநில முதலமைச்சரின் ஆலோசனையுடன் பொலீஸ்மா அதிபர், மாநிலத்துக்கான உதவிப் பொலீஸ்மா அதிபரை நியமிப்பார். உதவிப் பொலீஸ்மா அதிபர், பணியாற்றும் காலம் வரை, மாநில முதலமைச்சரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவார்.

நேரடி நியமனம் உள்ளூர் மட்டத்தில் கீழ் வரும் நிலைகளில் இடம் பெறும்.

அ. உதவி பொலீஸ் அதிபர்கள்

ஆ. சப்-இன்ஸ்பெக்டர்கள்

இ. கான்ஸ்டபிள்கள்

ஆட்சேர்ப்பு, இடமாற்றம், ஒழுங்கு, கட்டுப்பாடு, ஆட்சேர்ப்புக்கான தகுதி, சேவை நிபந்தனை முதலியவற்றை மாநில அரசு காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கும்.

இப்பணிகளைக் கவனிக்க இரண்டு மாற்று அமைப்புக்கள் நிறுவப்படும்.

1. மாநில பொலீஸ் கமிட்டி:- மாநில அரசில் பொலீஸுக்குப் பொறுப்பான அமைச்சர், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர், உதவிப் பொலீஸ்மா அதிபர், நீதி பரிபாலன அதிகாரி, முதலமைச்சரால் நியமிக்கப்படும் நிரந்தரப் பிரஜை இக்கமிட்டியில் உறுப்பினர்களாக இருப்பர். அல்லது:—

2. மாநில பொதுச் சேவை ஆணைக்குழு:- இக்குழு, பொலீஸார் சம்பந்தமாக இயங்கும் சமயம் பிரதிப் பொலீஸ்மா அதிபர், நீதி பரிபாலன அதிகாரி ஆகியோர் சமுகமளித்து இருப்பர்.

பயிற்சி: பொலீஸ் பயிற்சிக்கு, மாநிலப் பொலீஸ் பயிற்சிக் கல்லூரி நிறுவப்படும்.

நிபுணத்துவ பயிற்சிக்கு மத்திய பயிற்சிக் கல்லூரி ஒன்று நிறுவப்படும்.

(தொடரும்)

## புதிய கட்டடம்

மானிப்பாய், ஜன. 13

இரண்டு லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான அங்கீகாரம் தாவடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குக் கிடைத்துள்ளது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இதுவரை காலமும் புதிய கட்டடம் எதுவும் நிறுவப்படாமையால் மாணவர்கள் கல்வி கற்பதற்கு போதிய இடவசதியின்றிக் கஷ்டப்பட்டு வந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம் பிள்ளை, புதிய கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய பணிப்பு வழங்கியுள்ளார்.



பொய்யாமொழி

குறள்:

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

பொருள்:

மற்றவரையும் அறநெறியில் ஒழுகச் செய்து தானும் அறம் தவறாத இல்வாழ்க்கை, தவம் செய்வாரை விட மிக்க வல்லமை உடைய வாழ்க்கையாகும்.

## கழிவு நீர் வடிகால் மீட்கப்பட்டது

அச்சுவேலி, ஜன.13

அச்சுவேலி — சங்கானை வீதியோடு சேர்ந்து அச்சுவேலி பஸ் நிலையம் ஊடாகச் செல்லும் கழிவு நீர் வெள்ள வடிகால் நீண்ட காலத்திற்குப் பின்பு பொது ஸ்தாபனங்களின் அயராத முயற்சியினால் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி— சங்கானை வீதியுடன் சேர்ந்து பஸ் நிலையம் ஊடாகச் செல்லும் பெரிய கழிவு நீர் வடிகாலே தற்போது மீட்கப்பட்டிருக்கிறது.

இது பல வருடங்களாக பாவனைக்கில்லாமல் மூடப்பட்டிருந்தது. இந்த வடிகாலை முற்றாக மூடி கடைகளின் முற்பக்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அச்சுவேலி பிரஜைகள் குழு உறுப்பினர்கள், விழிப்புமன்ற உறுப்பினர்கள், பொது ஸ்தாபன பிரதிநிதிகள் நேரடியாகத் தலையிட்டு இந்த வடிகாலை மீட்டெடுத்துள்ளார்கள்.

## சிறப்பாக இயங்கும் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 13

பரந்தன் மாவட்டத்தில் பல கஷ்டங்கள் மத்தியிலும் சிறப்பாக இயங்கி வருவது பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

யாழ்ப்பாணம் மாவட்டச் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சாதகமற்ற சூழ்நிலையிலும் பூநகரிக் கூட்டுறவுச் சங்கம் நல்ல முறையில் நடந்து வருகின்றது- இப்படி அவர் சொன்னார்.

சங்க நெறியாளர் குழுத்தேர்தலில் கலந்து சொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

# யாழ்.மாவட்ட பாடசாலைகளின் தரத்தை உயர்த்த குழுக்கள்

யாழ்ப்பாணம், ஜன 13

யாழ். மாவட்டத்தில் மாணவர் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்குடன் பாடபோதனைகளை மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகள் புதிய ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளையின் பணிப்புரையின் பேரில் இந்தத்திட்டம் தயாராகியுள்ளது.

கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம் பிள்ளை தலைமையிலான கல்வி அதிகாரிகள் குழு செவ்வாய், வியாழன் ஆகிய இரு தினங்களிலும் வாரந்தோறும் பாடசாலைகளில் பாடபோதனைகளை மேற்பார்வை செய்யும்.

கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி தலைமையிலான மற்றொரு குழு விஞ்ஞான போதனைகளை மேற்பார்வை செய்யும்.

இக்குழு 11-ஆம், 12-ஆம் தரம் போன்ற உயர்தர வகுப்புக்களில் விஞ்ஞான போதனையின் தரத்தை உயர்த்த சிபார்சுகளைச் செய்ய உள்ளது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் தலைமையிலான குழு ஆரம்பப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

''அனுபவம் வாய்ந்த கல்வி அதிகாரிகளை உள்ளடக்கிய இம் மூன்று குழுக்களும் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பாடபோதனைகளை மேற்பார்வை செய்வதுடன், ஆசிரியர்களுக்கு உரிய ஆலோசனைகளையும் வழங்கும்.

இப்பரிசோதனைக்குழுக்கள் குறை காண்பவையாக அமைய மாட்டா. ஆசிரியர்களுக்கு உதவும் கரங்களாக செயற்படும்'' — என்று கல்வி வட்டாரம் விளக்கம் தந்தது.

# ஐக்கிய நாணய சபை மூலமே வீடமைப்புக் கடன்

## யாழ், மன்னார் மாவட்டங்களில்

பருத்தித்துறை, ஜன. 13

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் இவ்வருடம் முதல் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமே பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்திற்கான கடன் வழங்கப்படும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஐக்கிய நாணய சங்கங்கள் அமைக்கப்படும் வரை தொடர்ந்து கிராமோதய சபைகள் மூலம்தான் இந்தக் கடன் வழங்கப்படும்.

பத்து இலட்சம் வீட்டுத் திட்டம் ஆரம்பமான காலம் தொடக்கம் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் கிராமோதய சபைகளின் சிபார்சின் பேரிலேயே கடன் வழங்கப்பட்டு வந்தன.

யாழ். மாவட்டத்தில் கிராமோதய சபைகள் [illegible] பகுதிகளில் அமைக்கப்பட்ட [illegible] சின் பேரில் கடன் வழங்கப்பட்டு வந்தன.

தற்போது புதிய திட்டம் நடைமுறைக்கு வருவதையடுத்துதொடர்ந்து யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் ஐக்கிய நாணய சங்கங்கள் இல்லாத கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் புதிய சங்கங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாணய சங்கங்கள் முற்றாக இல்லாத கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இதனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறியப்படுகிறது.

பத்து இலட்சம் வீட்டுத் திட்டத்திற்கான கடன்களை ஐக்கிய நாணய சங்கங்கள் மூலம் [illegible] விடுதலும் கண்டி மாவட்டத்தில் [illegible] பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதுவெற்றியளித்ததைத் தொடர்ந்தே இத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுவதாகத் தெரிய வருகிறது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, ஐக்கிய நாணய சங்கங்கள் ஊடாக இக்கடனை வழங்குவதோடு அச்சங்கங்கள் மூலமே அக் கடனை மீளவும் அறவிடும்.

### மூளைக்காய்ச்சல் குழந்தை பலி

நல்லூர், ஜன. 13

மூளைக் காய்ச்சலினால் மேலும் ஒரு குழந்தை நேற்று மரணமானது.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சுதுமலையைச் சேர்ந்த நாகராசா குணசீலன் (2 வயது) என்ற குழந்தையே நேற்று மரணமானது.

இதுவரை ஐந்து குழந்தைகள் மூளைக்காய்ச்சலினால் மரணமாகியுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடமராட்சிக்கு தனியான கல்விப் பிரிவு

### ஆசிரிய வட்டாரங்கள் மகிழ்ச்சி

வடமராட்சி பகுதிக்கு தனியான கல்விப்பிரிவு ஒன்று நெல்லியடியில் இயங்க உள்ளது.

இதனை விரைவில் செயற்படுத்த யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை நடவடிக்கை எடுத்து வருகிறார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பதினொரு கல்வி வட்டாரங்களில் மூன்று இதனால் பயனடைய உள்ளன.

பருத்தித்துறை, கோப்பாய், உடுப்பிட்டி கல்வி வட்டாரங்கள் மூன்றும் நெல்லியடி அலுவலகத்தை மையமாகக் கொண்டு செயற்படும்.

யாழ்ப்பாண மாவட்டக் கல்வி அலுவலகச் செயற்பாடுகளைப் பரவலாக்கும் முன்னோடி நடவடிக்கையாக இது அமைந்துள்ளது என்று ஆசிரிய வட்டாரங்கள் உதயனிடம் மகிழ்ச்சி தெரிவித்தன.

## பயிர்களுக்கு பாதிப்பு

நல்லூர், ஜன 13

யாழ். மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக பெய்த காற்றுடன் கூடிய மழையினால் பயிர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

தென்னைமரங்கள், பனைமரங்கள் ஆகியன முறிந்து வீழ்ந்துள்ளன.

நெல், தக்காளி, கத்தரி செய்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் பயிர்களை மூடி தண்ணீர்பாய்கின்றது.

கால்நடைகள் மேய வழியின்றித் தவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Any Function at Your Home?
Remember this name for
Recording & Free
Wishes through UTHAYAN
Star video complex
'RAJ-COT' Near Post Office
KONDAVIL EAST, KONDAVIL.

# உதயன்

13-01-1986

உங்கள் வாழ்க்கையில் என்றோ ஒரு நாள் வரும்
அந்த நிகழ்ச்சிகளை என்றும் உயிர் ஓவியமாக
வீடியோ படம் பிடித்திடும் வேளையில்
'உதயன்' பத்திரிகையிலும்
வாழ்த்தி மகிழ்ந்திட
இவரை நாடுங்கள்
ஸ்ரார் வீடியோ
கொம்பிளெக்ஸ்
"ருஜ் கொற்", தபால் கந்தோர் அருகாமை
கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்.

# புது முறையில் அபிவிருத்தி சபைத் தேர்தல்

## இந்தவருட நடுப்பகுதியில் நடக்கும்

கொழும்பு, ஜன 13

புதிய முறையில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை நடத்த அரசு ஆலோசித்து வருகின்றது.

1986-ஆம்ஆண்டுநடுப்பகுதியில் அபிவிருத்திச் சபைத்தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.

புதிய திட்டத்தின் கீழ் ஒரே நாளில் சகல அபிவிருத்திச் சபைகளின் தேர்தல்களும் நடத்தப்படமாட்டா.

ஒருநாள் விட்டு ஒருநாள் இத் தேர்தல்கள் நடத்தப்படும்.

இரு வாக்குகளை ஒரு வாக்காளர் செலுத்த வேண்டும்.

ஒரு வாக்கு அரசியல் கட்சிக்கும் மற்ற வாக்கு அந்த அரசியல் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் உள்ள வேட்பாளர்களில் ஒருவருக்கும் செலுத்தப்படவேண்டும்.

கூடுதல் வாக்குகள் பெற்ற அரசியல் கட்சியில், கூடுதல் வாக்குகள் பெற்ற வேட்பாளரே, மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்படுவார்— இதுதான் அரசின் புதிய திட்டம்.

## இ. தொ. கா.

# பிரார்த்தனை நடக்காதா, நடக்குமா?

கொழும்பு, ஜன 13

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரார்த்தனை இயக்கம் திட்டமிட்டபடி நாளை ஆரம்பமாகுமா?

இலங்கை அரசாங்கம் இன்று சொல்லப் போகும் பதிலில்தான் இது தங்கியுள்ளது.

எனினும் அது கைவிடப்படலாம் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தூதுக்குழு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியை நேற்றிரவு சந்திக்க இருந்தது.

காங்கிரஸின் கோரிக்கைகள் பற்றிய அரசாங்கத்தின் இறுதி முடிவு இன்று காங்கிரஸ் தூதுக்குழுவிடம் அறிவிக்கப்படும்.

அதே வேளை இ. தொ. கா. வின் கொள்கைக் குழு நேற்றுக் கூடி அரசின் உறுதிமொழிகள் பற்றி விரிவாக ஆராய்ந்து ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளது. அந்த முடிவு இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

அந்த முடிவை அமைச்சர் லலித் அத்துலத்முதலியிடம் இ. தொ கா. தூதுக் குழு வெளியிடும்.

அதைத் தொடர்ந்து அரசு தெரிவிக்கும் பதிலில் தான் பிரார்த்தனை இயக்கம், திட்டமிட்டபடி நாளை நடைபெறுமா என்பது தெரியவரும்.

## கடும் குளிர்

காஷ்மீர், ஜன. 12

இந்தியாவின் வடமாநிலமான ஜம்மு - காஷ்மீரில் கடும் குளிர் நிலவுகிறது

முன் எப்போதும் இல்லாதவாறு 9 செல்சியசிற்கு வெப்பநிலை இறங்கி விட்டது.

வாவிகள், ஏரிகள் பனிக்கட்டியாகவிருக்கின்றன. மக்கள் அவற்றின் மீது நடந்து போய் வருகிறார்கள்.

## வன்செயலால் வெளியேறிய

# ஆசிரியர்கள் மீண்டும் வேலைசெய்ய அனுமதி

யாழ்ப்பாணம்.ஜன.13

வன்செயல்காரணமாக சொந்த இடங்களில் இருந்து வெளியேறிய ஆசிரியர்கள், மீண்டும் பழைய பாடசாலைகளுக்குச் சென்று பணியாற்றுவதில் இருந்த சிக்கல் நீக்கப்பட்டிருக்கிறது.

வன்செயல் தணிந்தபின்னர் இந்த ஆசிரியர்கள் தமது பாடசாலைகளுக்குச் சென்ற போது, அவர்களை அங்கு மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ள வட்டாரக்கல்வி அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

சில இடங்களில் இவர்களுக்கு வேலை நீக்க உத்தரவுகளும் கல்விப்பணிப்பாளர்களினால் வழங்கப்பட்டன.

இலங்கை ஆசிரியர் சங்கச்செயலாளர் திரு. க.சிவஞானம் இவர்களின் இந்தநிலை குறித்து கல்வி அமைச்சுக்கு முறையிட்டார்.

அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு எம் பி. சி சில்வா இப்பொழுது சுற்று நிருபம் ஒன்றை கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதன்படி உண்மையான காரணங்களைக் காட்டிவிண்ணப்பித்தால் இந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படும்.

அந்த அதிகாரம் கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

போலிக்காரணம் காட்டும் ஆசிரியர் மீது கல்விப் பணிப்பாளர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம்.

சுற்று நிருபத்தைப் பயன்படுத்தி வேலைக்குச் சேர்ந்து கொண்டு பின்னர் நிலுவைச் சம்பளம் பற்றி நடவடிக்கை எடுக்கலாம் என்று பொதுச் செயலாளர் திரு. சிவஞானம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அறிவித்துள்ளார்

## விமானப்படையும் உதவியதாம்

மட்டக்களப்பு.ஜன 13

மட்டக்களப்பு விமானபடை முகாமுக்கு அருகில் வெள்ளத்தால் சூழப்பட்டிருந்த தமிழ் அகதிகளுக்கு விமானப்படை வீரர்கள் வேண்டிய உதவிகளை நல்கினர்.

உணவு, மற்றும் பொருள்களை அவர்கள் கொடுத்துதவினர்.

## விசாரணைக்குச் சென்றவரின்

# முதுகு முறிந்தது ஆஸ்பத்திரியில் மரணம்

### நிந்தவூரில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜன 13

முஸ்லிம் வாலிபர் இயக்கம் ஒன்றின் பேரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் முதுகெலும்பு முறிந்த நிலையில் அரை உயிராகக் கொண்டுவந்து விடப்பட்டார்.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் பின் அங்கு மரணமானார்.

நிந்தவூர் நான்காம் குறிச்சியைச் சேர்ந்த முகைதீன் பாபா ஆதம் பாபா என்பவரே மரணமானவர்.

இவரது மரணம் தொடர்பான விசாரணை நேற்று மட்டக்களப்பில் நடந்தது.

கடந்த மூன்றும் திகதி மூன்று இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர் என்றும் இரண்டு நாட்களின் பின்னர் பலத்த உள் காயங்களுடன் அவர் மீண்டும் வீட்டில் கொண்டு வந்து விடப்பட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

## விபத்தில் 7 பேர் மரணம்

கொழும்பு,ஜன 13

மலையகத்தில் ரில-உல்ல என்ற இடத்தில் தனியார் பஸ் ஒன்றும் இ. போ. ச. பஸ் ஒன்றும் மோதியதில் 7 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்திருக்கலாம் என்று பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

★ வெள்ளம்

# அம்பாறையில் 30 ஆயிரம் பேர் பாதிப்பு

அம்பாறை, ஜன. 13

அண்மையிற் பெய்த பெருமழை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் சுமார் முப்பதாயிரம் பேர் பாதிப்பு அடைந்துள்ளனர்.

கல்முனையில் சுமார் 8 ஆயிரம்பேரும் சம்மாந்துறையில் 2 ஆயிரம் பேரும், நிந்தவூரில் 7 ஆயிரம் பேரும், அட்டாளைச்சேனையில் 5 ஆயிரம் பேரும், அக்கரைப்பற்றில் 8 ஆயிரம் பேரும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

இவர்களுள் சுமார் ஆயிரம்பேர் மோசமாகப் பாதிப்பு அடைந்துள்ளதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஜி எம். நந்தசேன உதயனுக்குத் தகவல் கொடுத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நெற்காணிகளில் நெற்செய்கை நாசமாகி உள்ளது.

## ரூபவாஹினி

13 - 1 - 86
திங்கட்கிழமை

| | |
|---|---|
| 5 00 | — செய்திகள் |
| 5.05 | — ஹீ-மான் |
| 5.30 | — வாட்டர்வில் காங் |
| 6.00 | — குழந்தைகள் நிகழ்ச்சி |
| 6.30 | — செய்திகள் (தமிழ்) |
| 7.00 | — விவசாயம் |
| 7 25 | — வாழும் கிரகம் |
| 8 00 | — செய்திகள் (சிங்களம்) |
| 9.00 | — செய்திகள் (ஆங்கிலம்) |
| 9.20 | — வெபஸ்டர் |
| 9.50 | — 'வி' - விஞ்ஞானத் தொடர் |
| 11.40 | — ஒளிபரப்பு முடிவு |

## ராஜீவுடன்...

(1ம் பக்க தொடர்ச்சி)

நான் கேட்பேன்.

ஏற்கனவே ஒரு நிபந்தனையை இலங்கை அரசு அதற்கு முன்னர் ஏற்க வேண்டும்.

சகலரும் போட்டியிடக் கூடிய முறையில்பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படும் என்று இலங்கை அரசு உறுதி அளிக்க வேண்டும்.

போராளிகள் உட்பட அனைவரும் போட்டியிடுவதற்கு உள்ள முட்டுக்கட்டைகளை முதலில் அரசு நீக்க வேண்டும்.

இப்படி நடைபெறும் தேர்தலில் வெற்றி பெற்று வரும் தமிழ்ப் பிரதிநிதிகளும் சிங்களப் பிரதிநிதிகளும் நேரடிப் பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தூதுக் குழுவிடம் சொன்னார்.

## தொண்டமா....

(1-ஆம் பக்க தொடர்ச்சி)

தீர்க்கப்பட்டன துப்பாக்கிப் பிரயோகம் சுமார் 20 நிமிட நேரம் நீடித்தது.

செல்வச்சந்நிதி கோவிலுக்கு அருகில் கடை வைத்திருந்த கே. தர்மலிங்கம் (வயது 60) என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

அவரது இரண்டு கால்களையும் இரண்டு குண்டுகள் துளைத்துச் சென்றிருக்கின்றன.

இந்தச் சம்பவத்தையடுத்து கோயிலைச் சுற்றியும், தொண்டமானாறு சந்நியிலும், முகாமிற்கு அருகிலும் இருக்கின்ற மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருகிறார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை தொண்டமானாறில் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் 7பேர் காயமடைந்தது தெரிந்ததே

## பயங்கரவாத...

(1ம் பக்க தொடர்ச்சி)

லேயே இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

1985 இல் 'லட்சத்து 10 ஆயிரம் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளே இலங்கை வந்தனர்

பயங்கரவாத சம்பவங்கள் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு உல்லாசப் பிரயாணிகள் செல்லப் பயப்படுகின்றனர்.

இதனால் நாட்டுக்கு உல்லாசப் பிரயாணிகள் வருவது குறைந்து உள்ளது.

இந்த நடுப்பகுதியில் [illegible] முடிவு கட்டப்படும் என்று [illegible] படி அமைச்சர் சொன்னார்.

## சிறை அலுவர் நான்கு பேர் வேலை நீக்கம்

கொழும்பு, ஜன. 13

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த முதலாவது சிங்கள இளைஞரான லெனின் நீர் கொழும்பு சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடியதைத் தொடர்ந்து அங்கு பணிபுரியும் சிறைச்சாலை அலுவலர்கள் நான்கு பேர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணை ஒன்றுக்கும் சிறைச்சாலை ஆணையாளர் உத்தரவிட்டிருக்கிறார்.

## நேற்றும் தாமதம்

யாழ்ப்பாணம், ஜன. 13

நேற்று இன்டர்சிற்றி ரயில் இரண்டே முக்கால் மணித்தியாலங்கள் தாமதமாக யாழ். ரயில் நிலையம் வந்து சேர்ந்தது.

பரந்தனில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கே தாமதத்திற்குக் காரணம்.

## விளையாட்டரங்கு

மூன்று நாடுகள் உலகக்கிண்ணப் போட்டி

# ஆஸியிடம் இந்தியா படுதோல்வி

பிறிஸ்பேர்ன்.ஜன.13

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் மூன்று நாடுகள் உலக கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஆட்டத்தில் இந்தியா மண் கவ்வியது

பிறிஸ்பேர்னில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்தியா நான்கு விக்கெட்டுக்களினால் தோல்வியுற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 161 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

சையத் கிர்மானி 27, முகம்மது அஸாருதின் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய துடுப்பாட்ட வீரர்கள் தரப்பில் மூன்று பேர் 'ரன்-அவுட்' ஆகியது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியா 45 1 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

மத்தியூஸ் 46 ஓட்டங்களையும் மக்டோமற் 24 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

ஸ்ரிபன் வோ 40 ஓட்டங்களை எடுத்தார்.

மத்தியூஸ் ஆட்டத்தின் சிறப்பு வீரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தச் சுற்றுப்போட்டியில் இதுவரை 3 ஆட்டங்கள் முடிவடைந்திருக்கின்றன மூன்று அணிகளும் தலா 2 ஆட்டங்களில் பங்குபற்றியிருக்கின்றன.

இந்த ஆட்டங்களிலிருந்து ஆஸி மூன்று புள்ளிகளையும், இந்தியா 2 புள்ளிகளையும், நியூஸிலாந்து ஒரு புள்ளியையும் பெற்றிருக்கின்றன.

# திட்டமிடல் அதிகாரிகள் உதவிப் பணிப்பாளராக நியமனம்

## ஆட்சேபித்து அரசுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்.ஜன 13

நாட்டில் உள்ள திட்டமிடல் அதிகாரிகள் அனைவருக்கும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் என்ற புதிய நியமனம் வழங்கப்பட்டு உள்ளது.

இலங்கைத் திட்டமிடல் சபை மேற்கொண்டுள்ள இம்முடிவு ஏற்கனவே உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களாகக் கடமை புரிந்து வரும் அதிகாரிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

இவர்கள் தங்கள் அதிருப்தியையும் கவலையையும் ஒரு மகஜர் மூலம் அரசாங்க மேலிடத்துக்கு அறிவித்து உள்ளனர்.

தமது தொழிற் சங்கமான அபிவிருத்தித்திட்டமிடல் ஊழியர் சங்கம் மூலமும் இதுபற்றி நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

தற்போது உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களாகக் கடமை புரிவோர், தம்மை சிரேஷ்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களாக நியமிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய நியமன நடவடிக்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்கள் மத்தியில் சேவை மூப்பு, சம்பள வீதம் ஆகியவை தொடர்பாக பெரும் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும் என்றும் இம் மகஜரில் கட்டிக் காட்டப்பட்டு உள்ளது.

## மா கப்பல் வருகிறது

திருகோணமலை, ஜன. 13

'ருகுண' என்ற சரக்குக் கப்பல் 14 338 மூடை பிரிமா மாவுடன் இன்று காங்கேசன்துறை துறைமுகம் வந்து சேரும்.

## ராஜீவை சந்திக்கும் மூவர்

புதுடில்லி, ஜன.12

பிரதமர் ராஜீவ் காந்தி புதுடில்லியில் இருக்கும்வேளை அவரைக தினமும் சந்திக்குத் உரிமை மூன்று பேர்லுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

மந்திரிசபைச் செயலாளர் திரு. பி. கே. கௌல், பிரதமரின் செயலாளர் திருபதி சர்ளா கிரவால், இந்திய வெளிநாட்டு புலனாய்வுச்சேவை இயக்குநர் ஆகிய மூவருமே அந்த வாய்ப்பைப் பெற்றுள்ளவர்கள்.

மற்றவகரிள், சக அமைச்சர்களுட்பட முன் அனுமதி பெற்றே பிரதமரைச் சந்திக்கவேண்டும்.

# வடக்கில் பொலீஸார் கட்டாயசேவை

## சாட்டுச் சொல்லி இனித் தப்பமுடியாது

கொழும்பு, ஜன.13

வடபகுதியில் சேவை புரியாது சாட்டுச் சொல்லித் தட்டிக் கழிக்கும் பொலீஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க பொலீஸ் மா அதிபர் சிறில் ஹெரத் தீர்மானித்து உளளார்.

ஒவ்வொரு பொலீஸ் அதிகாரியும் 6மாதகாலம் வடபகுதியில் கட்டாய சேவை ஆற்ற வேண்டும். இது நிபந்தனை.

அந்த 6 மாத காலத்தையும் ஏதோ சாட்டுச் சொல்லி விடுமுறை பெற்றுக் கழித்து விடுகின்றார்கள் சில பொலீஸ் அதிகாரிகள். சிலர் புதுமையான காரணங்களையும் காட்டுகின்றார்களாம்.

ஆண்டில்வழங்கப்படும் 150 நாள் சுகயீன லீவில் இந்த 6 மாத காலத்தையும் எக்காரணங் கொண்டும் கழிக்கக் கூடாது என்று பொலீஸ் மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## தொலைபேசிகளுக்கு பிரேத ஊர்வலம்

வரணி, ஜன. 1

பாண்ட் வாத்தியம் முழங்க 'இறந்த தொலைபேசி'களுக்கு இந்தியாவில் சவ ஊர்வலம் நடத்தப்பட்டது.

வரணிக்கு அருகில் உள்ளது பாடோஹி என்ற பட்டினம்.

பட்டினத்தில் பல வீடுகளில் உள்ள 'தொலைபேசிகள்' இறந்துவிட்டன.

பழுதடைந்த தொலைபேசிகளைத் திருத்தச் சொல்லி பலமுறை முறையிட்டும் தொலைத்தொடர்புத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை

பழுதடைந்த தொலைபேசி உரிமையாளர்களுக்கு கோபம் வந்து விட்டது.

எல்லா தொலைபேசிகளையும் சவப் பெட்டிக்குள் போட்டனர்.

பாண்ட் வாத்தியம் முழங்க ஊர்வலமாக 'இறந்த தொலைபேசிச் சடலங்கள்' இருந்த பெட்டியை தொலைப்பேசித் தொடர்புத் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

அதிகாரிகள் இறந்த சடலங்களுக்கு உயிர் கொடுப்பார்களா?

## படையினர் போராளி....

(1-ஆம்பக்க தொடர்ச்சி)

நிலையத்திலிருந்து படையினரை நோக்கி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

### பொதுமக்கள் சிதறி ஓடினர்

இருதரப்பினரும் துப்பாக்கிவேட்டுகளைத் தீர்த்துக்கொண்டிருக்கையில்-

தைப்பொங்கலுக்குத் தேவையான பொருள்களை வாங்கச் சந்தைக்கு வந்த பொதுமக்கள் நான்கு திக்குகளாலும் பதறி யடித்துக்கொண்டு ஓடினர்.

வர்த்தகர்களும் பொருள்களைச் சந்தையில் விட்டுவிட்டு ஓடினர்.

ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப்பறந்து நிலைமைகளை அவதானித்தது. ஹெலிக்கொப்டர் மீதுபலதடவைகள் சுடப்பட்டன. அதனைத் தொடர்ந்து அது உயரப் பறந்து சென்று வட்டமிட்டது. அங்கிருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

கடற்கரைப் பக்கத்தில் இருந்து வந்த துப்பாக்கிகுண்டுகள் தாக்கி ஐந்துபேர் படுகாயம் அடைந்தனர். மந்திகை ஆஸ்பத்திரியில் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் பெண். இரண்டு பேருக்கு உடனடியாகச் சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது.

துப்பாக்கிச் சன்னங்கள்தாக்கி வீடுகள் சேதமடைந்தன.

அச்சம்கொண்ட மக்கள் மூடை, முடிச்சுக்களுடன் மாதனை, கற்கோவளம் பகுதிகளுக்குத் தப்பிச் சென்றனர்.

நண்பகலுக்குப் பின்னர் பருத்தித்துறை-யாழ் நகர் பஸ் சேவை ஸ்தம்பித்தது. நகரம் வெறிச்சோடியது. கடைகள் பூட்டப்பட்டு இருந்தன.

## அரசு வோல்டன் காலமானர்

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்ப்பாணம் முன்னாள் நீதிவான் திரு அரசு வோல்டன் நேற்றுக் காலமானார்.

அவருக்கு வயது 80. கடும் சுகயீனம் காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

## மலையகத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

எனினும் இவர்களுக்கு தொகுதி தொகுதியாகவே குடியுரிமை வழங்க முடியும் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

ஆனால் அமைச்சர் தொண்டமான் அதற்கு இணங்க மறுத்து விட்டார் என்றும்—

4 இலட்சம் பேருக்கும் குடியுரிமை வழங்குவதற்கு ஒரே முறையில் மூல உத்தரவாதம் அவ எழுத்துசியம் என வலியுறுத்தினர் என்றும் தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து இலங்கை-இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து 4 இலட்சம் பேருக்கும் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் குடியுரிமை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 13-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org